முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.09.2023**, சனிக்கிழமை

1. அவதார ஞான யோகியே
ஆறுமுக அரங்க ஞானியே
அவனிகாக்க அவதாரமெடுத்த
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே அறிவுரை ஆசிதனை
குறைவிலா சோபகிருது தரிவைதிங்கள்
இருமூன்று திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 06 ம் நாள், 23.09.2023, சனிக்கிழமை)
இடங்கழி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான சன்மார்க்க நெறி
ஞான நெறியாக கலியினில்
ஞானதேசிகன் அமைத்தருள
4. அருளவே கலிவாழ் மக்கள்
அரங்கா என வேண்டிவர
தருமவழிகள் தனை ஏற்றுமே
தரணியெங்கும் அன்னதானம் செய்துவர
5. வருகவே மக்களுக்குப் புண்ணியபலம்
வல்லமையாகப் பெருகி நின்று
தருகின்ற தயவதனை வளர்த்து
தனிப்பெருங்கருணை வடிவாக மாறும்
6. மாறுதலை செய்தே தீருவேனென
மகத்துவமிக்க தவபலம் தன்னை
ஆறுமுகனார் சடாட்சர தீட்சையாக
அருளமுதாக மக்களுக்கு வழங்கி வர

7. வருகவே உலகோர் ஏற்று
வழிமொழிந்து தருமபலத்தை
முருகப்பெருமான் ஆசிபட
முழுமைபட எங்கும் செய்துவர

8. வருகவே இந்த வையகமும்
வருங்காலம் தருமலோகமாகி
ஆறுமுகனார் தலைமை வருகின்ற
அற்புத ஞான உலகமாகி

9. ஆகியே உலக மக்களுக்கு
அனைத்துப் பாதுகாப்பும் கூடிய
அகிலமே மாற்றம் கண்டடையும்
அன்னதனால் கலிவாழ் மக்கள்

10. மக்கள் அரங்கஞானியர் வழி
மாற்றம் தரும் வழிமுறைகளில்
ஆக்கமுடன் தேர்ச்சி கண்டு
அனைவரும் ஞானிகளாவர்

11. ஆகவே கலியுகம் ஞானயுகமாக
அரங்கனின் தருமயுகமாக
மகான்கள் ஆளும் புவியாக
மகான்கள் காணும் ஞான ஆட்சியுமாக
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—